சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 15/2019

2023 ம் ஆண்டு **24.11.2023** ம் தேதி ஷாஜகான்

என்பவரின் சாட்சியாகிய எமசா 1 ன் வாக்குமூலம்

(1969 ம் ஆண்டில் 44–வது பிரிவின்படி) திருமதி.பி.மோகனவள்ளி, பி.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்கள் முன்னிலையில், சார்பு நீதிமன்ற உதவியாளர் திரு.எம்.குமாரலிங்கம் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஷாஜகான் | தாலூக்கா | பொள்ளாச்சி |
| க.பெ. (அ) த.பெ. | காதர் மொய்தீன் | சமயம் | இந்து |
| கிராமம் | பொள்ளாச்சி | வயது | 42 |

முதல் விசாரணை

நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு எனது ஓட்டுநர் உரிமம், எனது ஆதார் அட்டை ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அவை முறையே **எமாசாஆ 1 மற்றும் 2** (அசலுடன் ஒப்பிடப்பட்டு நகல் குறியீடு செய்யப்பட்டது). எனது ஆம்னி வேன் TN 33 AZ 6836 வாடகைக்கு வைத்து ஓட்டி வருகிறேன். ஆசிக்ரசூல் என்பவர் வண்டியின் ஓட்டுநராக பணியாற்றினார். 11.05.2014 ம் தேதி நடைபெற்ற விபத்து குறித்து எனது வண்டியின் ஓட்டுநராக ஆசிக்ரசூல் மீது வால்பாறை நீதிமன்றத்தில் குற்ற எண் 69/2014 வால்பாறை காவல் நிலையம் சம்பந்தமாக வழக்கு நடைபெற்றது. குற்றத்தை ஒப்புக்கொண்டு ஆசிக்ரசூல் STC எண் 49/2015 ல் அபராதம் செலுத்தியுள்ளார். ஆம்னி வேனின் பதிவுச்சான்று, காப்பீட்டுச்சான்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, ஏனெனில் வண்டியை விற்றுவிட்டேன். 11.05.2014 தேதியில் ஆம்னி வேனுக்கு காப்பீடு இருந்தது, எந்த

நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என ஞாபகம் இல்லை. 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் எனது ஆம்னி வேன் காப்பீடு செய்யப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் காப்பீடு உள்ளதாக ஒரு சான்று கொடுத்துள்ளேன், அந்த காப்பீடு எண் போலியானது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அதனால் இவ்வழக்கில் இழப்பீடு கொடுக்க வேண்டுமெனில் நான்தான் இழப்பீடு செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த வேண்டிய கடப்பாடு இல்லை என்றால் சரியல்ல.

**மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி